www.tamilarangam.net

# தொடரும் நாஸிகளின் தாக்குதலில் இலங்கைக் குடும்பம் பலி.

31.01.1992 வெள்ளிக்கிழமை காலை 4.30 மணியளவில் ஹெசன்(Hessen) மானிலத்திலுள்ள லம்பர்றகைம்(Lampertheim) என்ற நகரத்தில் அகதிகள் வாழும் கட்டிடம் ஒன்று நாஸிகளினால் தீவைத்துக் கொழுத்தப்பட்டபோது இலங்கை அகதிக் குடும்பத்தைச் சேர்ந்த நிலீமா (25 வயது, 4மாதக் கர்ப்பிணிப் பெண்), மொகைதீன் (30 வயது), மூபக் (13 மாதக்குழந்தை) (தெகிவளையைச் சேர்ந்தவர்கள்) ஆகியோர் தீக்கிரையாயினர்.

இக்கட்டிடத்தில் லெபனான், துருக்கி, சிரியா, நைஜீரியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த இருபது அகதிகள் வசித்தனர்.

பலகையிலான படிகளில் வைக்கப்பட்ட தீ இருபது நிமிடங்களுக்குள் மேற்பகுதிகள் முழுவதற்கும் பரவியது. வெளியேறும் படிகளில் முற்றாக தீப்பிடித்திருந்தமையாலும், பல்க்கணி இல்லாமையினாலும் நிலீமா குடும்பத்தினர் தப்பித்துக்கொள்ளமுடியவில்லை. இக்கட்டிடத்தில் வசித்த மிகுதிப் பதினேழு பேரும் பல்க்கணி, கூரை ஆகிய வழிகளாலும் மரங்களில் தாவியும் உயிர்தப்பிக்கொண்டனர். இச்சம்பவத்தில் காயமுற்ற நைஜீரியர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிர்த்தப்பியவர்களின் தகவலின்படி நிலீமா குடும்பத்தினர் உதவிகேட்டுக் கதறியதாகவும் தங்களால் அவர்களைக் காப்பாற்றமுடியாமல் வெளியே தப்பிவந்து பொலிஸாரிடம் அவர்களைக் காப்பாற்றும்படி கதறிக்கேட்டதாகவும் அதற்கு தீ எரிந்துகொண்டிருக்கிறது, ஒன்றும் செய்யமுடியாது என்று பொலிஸார் அவர்களைக் காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்கவேயில்லை என்றனர்.

இம்மூவரின் உடல்கள் அடையாளங் கண்டுகொள்ளச் சிரமமான வகையில் கருகிய நிலையில் மதியம் 12 மணியளவில் கண்டெடுக்கப்பட்டது.

பொலிஸாரின் தகவல்களின்படியும், பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் இத்தீப்பிடித்ததற்கான காரணம் என்னவென்று சரியாகத் தெரியாது என வழமைபோலவே உண்மையை மூடிமறைக்கின்றன.

இப்படிகளில் தீப்பிடிக்க வேறு எந்தக் காரணங்களும் இருக்கமுடியாது. ஏற்கனவே இங்கிருந்த குப்பைத் தொட்டிகள் சென்ற ஆண்டு செப்ரெம்பர் மாதம் நாஸிகளால் கொழுத்தப்பட்டன. அண்மையில் ஜேர்மணியில் பரவலாக நடைபெற்ற அகதிகளுக்கெதிரான நாஸிகளின் தாக்குதல் முறைகளும் இங்கே கையாளப்பட்டுள்ள முறையும் ஒரேமாதிரியாக இருப்பதனால் இச்சம்பவம் நாஸிகளினாலேயே செய்யப்பட்டது என்று திட்டவட்டமாகக் கருதப்படுகிறது.

"ஹொயஸ்வேடா" சம்பவத்திற்கு பின்பு ஒவ்வொரு இரவும் வெளிவாசற்கதவைப்பூட்டி பாதுகாப்பை உறுதிசெய்துகொண்டு படுக்கைக்குச் செல்வது மொகைதீனின் வழக்கம். நாஸித் தாக்குதல்கள் அடங்கியிருப்பதுபோல் தென்பட்டதால் இவ்வழமையை மொகைதீன் அக்கறையின்றி விட்டுவிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துப்பியவர்களின் ஒருவரான நைஜீரியப் பெண்மணி ஒருவரின் தகவல்:

"அதிகாலை நாலரை மணி. நானும் எனது சகோதரனும் தூங்கிக்கொண்டிருந்தோம். திடீரென புகைவருவதாய் உணர்ந்தேன். படியால் ஓடித்தப்பலாம் என ஓடினேன். படிமுழுவதும் தீ. கீழ்மாடியில் நிலீமா, மொகைதீன் கதறல்ச் சத்தம் கேட்டது. அவர்கள் உதவி உதவி எனக் கத்தினர். அவர்கள் வீட்டிற்குப் பல்கணி இல்லை. படிகளினால் ஏறிவந்தால் எங்கள் வீட்டுக்கூரையினால் துப்பி ஓடலாம். ஆனால் படிகளிலும் தீ. அவர்களால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. நான் திரும்பி ஓடிவந்து ஓட்டைப்பியத்து வெளியேறினேன். அவர்களின் உதவி உதவி என்ற கதறல்ச் சத்தம் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர்களின் சாவும் இச்சம்பவமும் கொடூரமானது. ஆனால் இதிலும் கொடுமையான விடயம் என்னவென்றால் நிலீமா குடும்பத்தினர் உள்ளே உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கையில் பொலிஸாரிடம் நானும் இன்னும் பலரும் கதறிக் கேட்டும் அவர்களைக் காப்பாற்ற சரியான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. பொலிஸார் முயற்சி எடுத்திருந்தால் அவர்களைக் காப்பாற்றியிருக்கலாம்.

*எரிந்த வீட்டில்*
*கிடந்த உடல்கள்*
*அன்றுபோலவே*
*இன்று அகதிகள்*
*எரியும் நெருப்பில்*
*எண்ணை துவும்*
*செய்தியந்திரம்*
*அகதிகள் மேல்*
*பழியைப் போடும்.*
*விடியும் என்று*
*வந்தவர்கள்*
*இங்கு விடிவது*
*உயிர்களை*
*எடுப்பதற்காகவா?*

*-வாணி.*

**இலங்கை பாசிச எதிர்ப்புக்குழு.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்